ORIGINAL ARTICLE

# பத்தி கருத்தியல் கோட்பாட்டின்வழி விமர்சனக் கட்டுரை

## [PATTI KARUTTIYAL KODPAADDINVAZHI VIMARSANAK KADDURAI]

## ANALYZES THE FILM CRITICISM BY USING THE THEORY OF TEXTUALISM

**ச. தசரதன்** [1] / **C. Thasarathan** [1]
**கு. முனீஸ்வரன்** [2] / **K. Muniisvaran** [2]

[1]சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா. / Sultan Idris Education University, Malaysia. மின்னஞ்சல் / Email: thasarabbit@yahoo.com
[2]சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா. / Sultan Idris Education University, Malaysia. மின்னஞ்சல் / Email: muniisvaran@fbk.upsi.edu.my

DOI: https://doi.org/10.33306/mjssh/36

**ஆய்வுச் சாரம்**

இவ்வாய்வு விமர்சனக் கட்டுரைகளில் உள்ள கூறுகளைப் பத்தி கருத்தியல் கோட்பாட்டின் வாயிலாக ஆராய்வதாகும். பத்தி கருத்தியல் கோட்பாடு மலேசிய எழுத்தாளரான மானா சீகானா என்று அழைக்கப்படும் அப்துல் ரகுமான் ஹனாபியா என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பத்தி கருத்தியல் கோட்பாடு நான்கு கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவை முன்னிலை கொள்கை, முரண்பாட்டுக் கொள்கை, வலுவான கொள்கை மற்றும் தனிப்பட்ட கொள்கையாகும். இந்த நான்கு கொள்கைகளும் தரமான விமர்சனக் கட்டுரைக்கான கூறுகளைக் கொண்டுள்ளது. பத்தி கருத்தியல் கோட்பாட்டின் கொள்கைகள் எவ்வகையில் விமர்சனக் கட்டுரை எழுத துணைப் புரிகின்றது என ஆராய மலேசிய எழுத்தாளரான கே.பாலமுருகனின் விமர்சன நூலான ‘மரங்கொத்தியின் இசை’ இவ்வாய்குட்படுத்தபட்டுள்ளது.

**கருச்சொற்கள் :**பத்தி கருத்தியல் கோட்பாடு, விமர்சனக் கட்டுரை, மானா சிகானா, கே.பாலமுருகன், சினிமா விமர்சனம்.

**Abstract**

This review examines the elements of film criticism through Theory of Textualism. The theory has been introduced by the Malaysian writer, Abdul Rahman Napiah, known as Mana Sikana. The theory is based on four principles. They are forward policy, conflict policy, strong policy and personal policy. These four principles constitute the elements of a standard film critical article. This is the soundtrack of the Malaysian writer K. Balamurugan's critical book, The Tree of Life, to explore how the Theory of Textualism help to write critical essays.

**Keywords:** Theory of Textualism, critical article, Mana Sikana, K. Balamurugan, film criticism.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 3rd July 2019, revised 18th August 2019, accepted 30th August 2019

**முன்னுரை**

சினிமா விமர்சனம் தமிழ்ச் சூழலுக்குப் புதிதல்ல. நாளிதழ், தொலைக்காட்சி, இணையம், வானொலி போன்ற ஊடங்களில் சினிமா விமர்சனம் படைக்கப்பட்டு வருகிறது (Hashim Awang, 2015)[1]. ஆனால், அவை விமர்சனக் கொள்கைகளைப் பின்பற்றி வரவில்லை என்பதை ஆய்வாளர்கள் உணர்ந்தனர். விமர்சனக் கட்டுரை குறிப்பிட்ட சில வரையறைகளையும் அளவீட்டு அடிப்படையிலும் இருத்தல் அவசியம் (Mana Sikana, 2015)[2]. அந்த வகையில் மானா சிகானா உருவாக்கிய பத்தி கருத்தியல் கோட்பாட்டைத் தேர்ந்தெடுத்தனர். அந்தக் கோட்பாட்டைக் கொண்டு மலேசிய எழுத்தாளரான கே. பாலமுருகன் எழுதிய ‘மரங்கொத்தியின் இசை’ எனும் சினிமா விமர்சன நூலை ஆய்வு செய்யும் வண்ணம் இந்த ஆய்வு விரிகிறது.

**பத்தி கருத்தியல் கொள்கைகள்**

பத்தி கருத்தியல் கோட்பாட்டின் கொள்கைகளில் நான்கு கொள்கைகள் அடிப்படையாக இருக்கின்றன. அவை முன்னிலை கொள்கை, முரண்பாட்டுக் கொள்கை, வலுவான கொள்கை மற்றும் தனிப்பட்ட கொள்கையாகும்.

**முன்னிலை கொள்கை**

பத்தி கருத்தியல் கோட்பாட்டில் முதன்மை கொள்கையாக வருவது முன்னிலை கொள்கையாகும். இம்முன்னிலை கொள்கையானது ஒரு விமர்சன எழுத்தாளர் எவ்வகையில் தனது பின்புலத்தில் உள்ள தகவல்களைக் கட்டுரையில் புகுத்துகிறார் என்பதைப் பற்றியதாகும். எழுத்தாளரின் நினைவுகள், எண்ண அலைகள், கேட்ட கதைகள், குறிக்கோள், சம்பவங்கள் போன்றவை முன்னிலை கொள்கையை அடையாளப்படுத்துகிறது.

எழுத்தாளர் விமர்சனக் கட்டுரை எழுதும்போது அக்கருத்துகளில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்வதில் உண்மையான தகவல்களைக் கொண்டிருப்பதை உறுதிசெய்ய வேண்டும். எழுத்தாளரின் அனுபவங்கள் விமர்சனத்திற்குத் தேவையாக இருக்கும் என்ற நோக்கத்தில் பகிரப்பட்டு ஒரு சமநிலையை உண்டாக்க வேண்டும். அதைத் தவிர்த்து, எழுத்தாளரின் அனுபவங்கள் கருத்துகளுக்கு முரண்பாடாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும். முன்னிலை கொள்கையானது எழுத்தாளர்களைப் பல மூலங்களில் இருந்து தகவல்களைத் திரட்டியும் தனது அனுபவத்தையும் பெருக்கவும் ஊக்குவிக்கின்றது. ஒரு விமர்சனத்தை எழுதும் எழுத்தாளர் முதலில் அவர் விமர்சனம் செய்யத் தகுதியானவரா என்ற கேள்வி எழாமல் இருக்க பலதரப்பட்ட புத்தகங்களை வாசித்தும் அத்துறையில் அனுபவசாலியாகவும் இருப்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

**முரண்பாட்டுக் கொள்கை**

பத்தி கருத்தியல் கோட்பாட்டில் இரண்டாவது கொள்கையாக முரண்பாட்டுக் கொள்கை அமைந்துள்ளது. முரண்பாட்டுக் கொள்கையானது எழுத்தாளரின் படைப்பில் உள்ள ஒற்றுமையையும் வேற்றுமையையும் ஆராய பயன்படுத்தப்படுகிறது. எழுத்தாளர் தனது படைப்பில் இது நாள் வரை கடைபிடித்து வந்த வரையறைகளை மீறி புதியதாக ஒரு நடையைப் பின்பற்றும்போது அவரது இலக்கிய நடையில் ஒரு மீறுதல் ஏற்படுகின்றது. இந்த மீறுதலே முரண்பாட்டுக் கொள்கையாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. எழுத்தாளர் தான் இது நாள் வரையில் எழுதி வந்த நடையில் மீறுதல் மட்டும் முரண்பாட்டுக் கொள்கையாக எடுத்துக்கொள்ள முடியாது. இது நாள் வரை முந்தய எழுத்தாளர்கள் பின்பற்றி வந்த நடையை மீறி தான் சுயமாக ஒரு நடையைப் பின்பற்றும்போதும் அங்கே ஒரு மீறுதல் ஏற்படுகின்றது.

மூன்றாவதாக, குறிப்பிட்ட ஓர் இலக்கியத்துக்கென்று இருக்கும் கூறுகளை மாற்றியமைக்கும்போதும் அங்கே மீறுதல் ஏற்படுகிறது. இம்மூன்று மீறுதல்களும் முரண்பாட்டுக் கொள்கையாகப் பத்தி கருத்தியல் கோட்பாட்டில் முரண்பாட்டுக் கொள்கையாக எடுத்துக்கொள்ளப்படுகின்றன. ஒரு விமர்சன எழுத்தாளர் முரண்பாட்டுக் கொள்கையைப் பின்பற்றும்போது அவரது படைப்புகள் இது நாள் வரையில் இருந்து வந்த

படைப்புகள் போல் இல்லாமல் புதிய நடையைப் பின் பற்றி இருக்கும். விமர்சனத்தை வாங்கிப் படைக்கும் வாசகர்களுக்கும் ஒரு வித சலிப்பு இல்லாமல் புதுமையை விரும்பி படிக்கும் சூழல் ஏற்படுகின்றது.

**வலுவான கொள்கை**

வலுவான கொள்கை என்பது எழுத்தாளர் தனது கருத்துகளில் வலுவை எடுத்துரைப்பதற்கான கருத்துகளைச் சேர்ப்பதாகும். விமர்சனம் என்பது ஒருவரது படைப்பை ஆராயும் செயல் என்பதால் எழுத்தாளர் வெறுமனே தனது கருத்துகளை எடுத்துரைப்பது விமர்சனத்தை வாங்கிப் படிப்போரின் மத்தியில் குழப்பத்தையும் நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தும். ஆகவே, எழுத்தாளர் தனது கருத்துகளின் வலுவை அதிகரிப்பதற்காக மற்ற படைப்புகளின் மீது ஒப்பீடையும் சான்றுகளையும் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்யும்போது எழுத்தாளரின் படைப்பு மற்ற எழுத்தாளர்களின் சாயலில் இல்லாமல் ஒரு வலுவான படைப்பாக இருக்கும். ஒரு படைப்பின் மீது விமர்சனம் செய்யும்போது ஒவ்வொரு எழுத்தாளருக்கும் வெவ்வேறான கண்ணோட்டம் இருக்கும். எந்த எழுத்தாளரின் விமர்சனம் நம்பகமான கருத்துகளையும் உண்மையையும் கொண்டிருக்கிறதோ அதுவே படிப்போரின் மனதைக் கவர்கின்றது.

இதன் அடிப்படையில் விமர்சன எழுத்தாளர் தன் படைப்பைப் படைக்கும் முன் இதற்கு முன் வெளிவந்த படைப்புகளின் மீது ஒப்பீடு செய்யும்போது புதியதாக ஒன்றை படைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றும். பத்தி கருத்தியல் கோட்பாட்டில் வலுவான கொள்கையைப் பின்பற்றும் விமர்சன எழுத்தாளரின் படைப்பில் உள்ள கருத்துகள் உண்மையாகவும் வலுவானதாகவும் இருக்கும் என Mana Sikana (2006)[3] கூறுகிறார்.

**தனிப்பட்ட கொள்கை**

பத்தி கருத்தியல் கோட்பாட்டில் நான்காவது கொள்கையாக இருப்பது தனிப்பட்ட கொள்கையாகும். தனிப்பட்ட கொள்கையானது எழுத்தாளருக்கென படைப்பில் இருக்கும் தனி நடை அல்லது பாணியாகும். தமிழ் எழுத்துத் துறையில் புகழ்பெற்ற எழுத்தாளர்களாக விளங்கும் சுஜாதா, கல்கி, கண்ணதாசன், பாரதியார், வைரமுத்து, கம்பன் போன்றோர் மக்கள் மத்தியில் இன்றும் பேசப்படுகிறார்கள் என்றால் அவர்களுக்கென இருக்கும் நடையாகும். ஒவ்வொருவரின் எழுத்தும் அவர்களின் பாணியில் உள்ளதால் படிப்போர் அவ்வெழுத்தின் பாணியை வைத்தே எழுத்தாளரை அடையாளங்கண்டு விடுவர்.

விமர்சனக் கட்டுரையை எழுதும் எழுத்தாளரின் எழுத்தும் அதை வாங்கிப் படிப்போரின் மனதில் நிற்க அவர்கெளுக்கென ஒரு தனிப்பட்ட கொள்கை தேவைப்படுகிறது. ஒரு

எழுத்தாளர் மற்ற எழுத்தாளரின் பாணியில் தனது எழுத்தை பின்பற்றாமல் இருக்க தனிப்பட்ட கொள்கை துணைப்புரிகிறது. தற்காலத்தில் மூத்த எழுத்தாளர்களின் படைப்புகள் சந்தைக்கு வரும்போது அதை வாங்கிப் படிக்கும் இளம் எழுத்தாளர்களுக்கு அவர்களின் மொழியின் தாக்கம் ஏற்படுவதுண்டு. புதியதாக எழுதும்போது அவர்களின் பாணியைப் பின்பற்றும் போக்கும் இயல்பாக ஏற்படும். இதனை தவிர்த்து தனக்கென ஒரு தனி பாணியையும் நடையையும் உருவாக்கி எழுத்துத் துறையில் முத்திரை படைப்பது விமர்சன எழுத்தாளர்களின் குறிக்கோளாக இருக்க வேண்டும் என்று Mana Sikana (1998)[4] கூறுகிறார்.

## ஆய்வு எல்லை


இந்த ஆய்வில் மலேசிய எழுத்தாளரான கே.பாலமுருகனின் படைப்பான 'மரங்கொத்தியின் இசை' (2017)[5] ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வாளர் மலேசியத் தமிழ் விமர்சனக் கட்டுரைகளை ஆராயும்போது திரை விமர்சன நூல்கள் பற்றிய ஆய்வுகள் குறைவாகவே இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அவ்வகையில் மலேசியத் தமிழ்த் திரைப்பட விமர்சன நூல்கள் தொகுப்பாக அச்சிடப்பட்டு வெளிவந்தவை இரண்டாகும். அவை 2012-இல் வெளிவந்த 'தீர்ந்து போகாத வெண்கட்டிகள்' மற்றும் 2017-இல் வெளிவந்த 'மரங்கொத்தியின் இசை' ஆகும். ஆய்வாளர் இவ்விரண்டு நூல்களில் ஆய்வுகுட்படுத்திய நூல் 2017-இல் வெளிவந்த திரைப்பட விமர்சனங்களின் தொகுப்பான 'மரங்கொத்தியின் இசை'. இதற்கு காரணம், இந்நூல் சமீபத்தில் வந்த புதிய வரவு என்பதாலும் வாழ்வியலின் பின்புலங்களை கல்வி, அரசியல், சமூகம் போன்ற பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டதால் ஆகும். மானா சீகானாவின் பத்தி கருத்தியல் கோட்பாடும் ஆய்வின் எல்லையாக இவ்வாய்வுக்குக் கொள்ளப்பட்டுள்ளது. திரைப்பட விமர்சனக் கட்டுரைகளை ஆராய கோட்பாடு ஒன்று தேவைப்படும்போது மலேசிய விமர்சனக் கட்டுரைகளை ஆராய முந்தைய ஆய்வாளர்கள் பயன்படுத்திய கோட்பாடாகவும் பரிந்துரைத்த கோட்பாடாகவும் இருந்ததால் பத்தி கருத்தியல் கோட்பாடு ஆய்வாளரால் தேர்வு செய்யப்பட்டது.

## ஆய்வு செயல் முறை

இந்த ஆய்வு பண்புசார் ஆய்வாகவே அமையப்பெறுகின்றது. இந்த ஆய்வில் மலேசிய எழுத்தாளரான கே.பாலமுருகனின் விமர்சனத் தொகுப்பான மரங்கொத்தியின் ஆய்வுக்குட்படுத்தப்படுகிறது. மானா சீகானா எழுதிய பத்தி கருத்தியல் கோட்பாட்டின் விளக்கங்கள் குறித்த நூல்களைப் பின்னொற்றியே இவ்வாய்வு நடத்தப்படுகிறது. இந்த ஆய்வு நூலக ஆய்வை அணுகுமுறையைக் கொண்டு தகவல்கள் சேகரிக்கப்படுகிறது. நூலக ஆய்வின் துணையாக ஆய்வின் தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், மாத இதழ்கள் மற்றும் கையேடுகளும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், மின்னியல் நூலகங்கள், ஆய்வேடுகள், கட்டுரைகள், குறிப்புகள் போன்றவை ஆய்வாளரின் தரவுகள்

சேகரிப்பிற்குத் துணைப் புரிகின்றன. இவ்வாய்வு பண்புசார் ஆய்வாக அமைவதால் நூலக ஆய்வில் கிடைக்கப்பெறும் தரவுகள் அனைத்தும் விளக்க முறையில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

## கோட்பாட்டுக் கட்டமைப்பு




*படம் 1:* பத்தி கருத்தியல் கோட்பாட்டு விளக்கப் படம்

## ஆய்வின் கண்டுபிடிப்பு

பத்தி கருத்தியல் கோட்பாட்டின்வழி விமர்சனக் கட்டுரை எழுதும் முறையை ஒரு வரையறைக்குள் கொண்டு வர முடிகிறது. மரபுகவிதை, சிறுகதை, நாவல் போன்ற இலக்கியங்களுக்கு எப்படி ஒரு கட்டுபாடும் வரையறையும் உள்ளதோ அது போன்று

விமர்சனக் கட்டுரைகளுக்கும் ஒரு கட்டுப்பாடு தேவைப்படுகிறது. இந்த ஆய்வில் மூலமாக பத்தி கருத்தியல் கோட்பாட்டின் நான்கு கொள்கைகள் விமர்சனக் கட்டுரைகளின் கூறுகளை ஆராய ஏற்புடையதாக உள்ளது என்று அறிய முடிகிறது. வரும் காலங்களில் புதிய விமர்சன எழுத்தாளர்கள் ஒரு விமர்சன கட்டுரையை எழுதும்போது பத்தி கருத்தியல் கோட்பாட்டின் கொள்கையைக் கருத்தில் கொண்டால் அவர்களின் விமர்சனம் தரமாகவும் முறையாகவும் இருக்கும். இந்த ஆய்வின் மூலமாக மலாய் விமர்சன கட்டுரைகள் பத்தி கருத்தியல் கோட்பாட்டின் நான்கு கொள்கைகளை பின்பற்றி அதிகமான விமர்சங்களையும் ஆய்வுகளையும் செய்துள்ளது என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதன் வரிசையில் மலேசிய தமிழ் இலக்கியத்தில் விமர்சனக் கட்டுரைகள் புதிய வரவாக உள்ள நிலையில் அதனை வரையறுக்க பத்தி கருத்தியல் கோட்பாடு துணைப்புறிகிறது. மொழி வேறாக இருப்பினும் அதன் கூறுகளை வரையறுக்க கோட்பாடு தடையாக இருக்காது என்று இவ்வாய்வில் கண்டுபிடிக்கப்பட்டது.

## முடிவுரை

தமிழ் விமர்சனக் கட்டுரை மலேசியாவில் புத்தகமாக அச்சிட்டு வெளிவந்தவை விரல்விட்டு எண்ணக்கூடிய நிலையில் உள்ளது. மலேசிய இலக்கியத் துறைக்கு விமர்சனக் கட்டுரைகள் புதிய வரவுகளாக இருப்பினும் அதற்கென ஒரு வரையறை என்பது ஆய்வாளரின் அறிவுக்கு எட்டியவரை இல்லை என்றே கூறமுடிகிறது. மரபுக்கவிதை, சிறுகதை, நாவல் போன்ற இலக்கியங்களுக்கு இருக்கும் கூறுகளும் வரையறையகளும் விமர்சனக் கட்டுரைக்குத் தமிழில் இல்லை. ஆகையால் கோட்பாட்டைப் பின்பற்றி எழுதும்போது அதற்கென ஒரு கட்டுப்பாடு அங்கே உருவாகிறது. இவ்வாய்வில் ஆய்வாளர் தேர்தெடுத்த கோட்பாடானது பத்தி கருத்தியல் கோட்பாடாகும். இக்கோட்பாட்டின் நான்கு கொள்கைகளும் ஒரு தரமான விமர்சனக் கட்டுரையை எழுத வழிவகுக்கும் என்று ஆய்வின் முடிவில் அறிய முடிகிறது. மேலும், தமிழில் ஒரு தரமான விமர்சனக் கட்டுரையை எழுத இது போன்ற கோட்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

## துணைநூற்பட்டியல்


1. Hashim Awang. (2015). *Literature critic in theories and applications and traditions. (Kritikan sastera dalam teori dan aplikasi dan tradisi).* Selangor: Achik Sdn. Bhd.
2. Mana Sikana. (2015). *National writer on throne of excellence (Sasterawan Negara di takhta keunggulan).* Kuala Lumpur: Translation Institute & Book Malaysia Berhad.
3. Mana Sikana. (2006). *Modern Malay literature critic (Kritikan sastera Melayu moden).* Kuala Lumpur: Pustaka Karya Publications.
4. Mana Sikana. (1998). *Theory and approach to modern literary criticism (Teori dan pendekatan kritikan sastera moden).* Shah Alam: Fajar Bakti.

5. Balamurugan, K. (2017). *Woodpeckers Tune (மரங்கொத்தியின் இசை).* Mowgli: Chennai.